
பக்கங்கள்:-23

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 18 | சனிக்கிழமை | 02.03.2024 | அதிர்வு 214 |
|---|---|---|---|---|---|

## பெருமளவானோர் ரணிலின் பக்கம்!

### சஜித் போட்டியிடமாட்டார் என்று ஐ.தே.க. தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவானோர் 07▶

### மரண விசாரணை, பிரேத பரிசோதனையால்

# சாந்தனின் பூதவுடல் யாழ். வருவது தாமதம்

### இறுதிக்கிரியை தொடர்பில் இன்னும் முடிவில்லை



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் நயவஞ்சகத்தால் உயிரிழந்த ஈழத்தமிழன் சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் பூதவுடல் நேற்று நண்பகல் நாட்டை வந்தடைந்தது. எனினும், மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையால் பூதவுடல் யாழ்ப்பாணம் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் இறுதிக்கிரியைகள் தொடர்பில் இன்னும் முடிவில்லை. 07▶

## திருகோணமலை கடலில் மிதந்து வந்த அடையாளம் தெரியாத ஆணின் சடலம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – டொக்யாட் கடலில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதுஎன்றுபொலிஸார்தெரிவித்தனர்.

கடலில் மிதந்து வந்து கொண்டிருந்த நிலையில் மேற்படி சடலத்தை அவதானித்த பொலிஸின் உயிர் காக்கும் படையினர், கடலுக்குச் சென்று அந்தச் சடலத்தை மீட்டுக் கரைக்கு எடுத்து வந்தனர்.

இடது கால் இழக்கப்பட்ட அங்கவீனமான நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும், அவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மரணத்துக்கான 07▶

## இலங்கை விமானப் படையின் 73 ஆவது வருட நிறைவு விழா

வானின் பாதுகாவலர்கள் என்று அழைக்கப்படும் இலங்கை விமானப் படையானது தனது 73 ஆவது வருட நிறைவை இன்று விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் வழிகாட்டல் மற்றும் தலைமையில் இலங்கை விமானப்படைத் தலைமையகத்தில் கொண்டாடவுள்ளது.

இந்த வருடம் இலங்கை விமானப்படையின் நிறைவு விழாவை முன்னிட்டு 07▶




தமிழரசுக் கட்சித் திருவிழா போன்ற ஒன்று நமது சுகாதார அமைச்சிலும் நடக்கின்றது என்றார் நண்பர் ஒருவர்.

எனக்கு விளங்கவில்லை. என்ன விடயம் என்றேன். அவர் விளக்கிக் கூற விடயம் மலைப்பானது எனக்கு.

இரண்டு பூனைகளுக்கு இடையில் அப்பத்துக்குச் சண்டை வர, குரங்கு அதைப் பங்கிடும் சாக்கில் ஏப்பமிட்ட கதை நமக்குத் தெரியும். 07▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# இலங்கையில் பொருளாதார உரிமைகள் மீறப்படும்போது அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயார்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“இலங்கையில் பொருளாதார உரிமைகள் மீறப்படும் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயார். செங்கடலில் இலங்கையின் பொருளாதார உரிமைகளுக்கு ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில், அதற்கு எதிரான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுக்கும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை சீனக்குடா விமானப்படை தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை விமானப்படை கெடட் அதிகாரிகளுக்கு அதிகாரவாணை அளிக்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்நாட்டு, வெளிநாட்டு விரோதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களை சார்ந்திருக்கிறது. இன்று நமது நாட்டின் பொருளாதாரம், சமூக கட்டமைப்பு, அரசியல் முறைமை சரிவிலிருந்து மீண்டு வருகின்றன. கடந்த காலத்திற்கு மீண்டும் செல்ல முடியாது. எனவே நாம் இங்கிருந்து முன்னேற வேண்டும். அதற்கு, நாட்டில் மிகப்பெரிய அளவில் நவீனமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

துரிதமாக பொருளாதார மாற்றத்திற்கு செல்ல வேண்டும். வளர்ச்சியடையாத நாடாக நாம் தொடர்ந்தும் இருக்க முடியாது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது அதன் பலன்கள் உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் கிடைக்கும்.

எனவே, நாட்டின் அனைத்து தருணங்களிலும் நாட்டின் சட்டத்தை பாதுகாப்பதன் மூலம் அரசமைப்பின் பிரகாரம் ஸ்திரத்தன்மையைப் தக்க வைத்துகொள்வதற்காக நீங்கள் உங்களை அர்ப்பணிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். மேலும் எமது நாட்டை எதிரிகளின் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பது 03













# இலங்கையில் பொருளாதார உரிமைகள் மீறப்படும்போது அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயார்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டுமன்றி, இன்றைய சர்வதேச அரசியல் சூழலுக்கு ஏற்ப பிராந்திய பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

பிராந்தியத்தின் அமைதிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பு ஏற்பட்டால் அது எமது நாட்டுக்கும் ஆபத்தானதாகும். நாம் தனியொரு நாடாக மட்டும் வாழ முடியாது. ஒவ்வொரு நாட்டுடனும் கைகோர்த்து முன்னேற வேண்டும். இலங்கை போன்ற யுத்த அனுபவம் மிக்க நாடு ஒதுங்கி நிற்பதானது கடமைகளை துறந்துச் செயற்படுவதாகிவிடும். பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு மிக முக்கியமானது. அதேபோல் உலக அமைதியும் முக்கியமானது. எனவே, இவ்வாறான விடயங்களுக்கு எமது ஒத்துழைப்பு அவசியப்படும் போது ஒரு நாடு என்ற வகையில் முப்படையினரின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எமது படை மாலி இராச்சியத்தை பயங்கரவாதத்திலிருந்து மீட்க உதவியது. அது பாராட்டப்பட வேண்டியதாகும். இன்று செங்கடலில் நமது பொருளாதார உரிமைகள் பாதிக்கப்படுமானால் அவற்றைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். எனவே, பிராந்தியம் மற்றும் உலக அமைதிக்கு சவால்கள் விடுக்கப்படும் வேளைகளிலும் ஐக்கிய நாடுகள் சபைக்கு தேவையான ஆதரவை வழங்குவோம். எனவே, உலக அமைதியும் ஸ்திரத்தன்மையையும் போன்றே நமது நாட்டின் அமைதியும் ஸ்திரத்தன்மையும் பாதுகாக்க வேண்டும்.

முப்படைகளும் அடுத்த தசாப்தத்தில் பெருமளவான மாற்றங்களைச் சந்திக்கும். இன்றைய உலகம் தொழில்நுட்ப யுகத்தில் உள்ளது. இராணுவங்கள் தொழில்நுட்பத்தை மையப்படுத்தியே செயல்படுகின்றன. நாமும் படிப்படியாக அந்த நிலையை எட்ட வேண்டும். உங்களுக்கு அதற்கான பொறுப்பு உள்ளது. இந்த அனைத்து விடயங்களுடனும் நீங்கள் வலுவான இராணுவமாக உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.” – என்றார்.













# விமல் வீரவன்ஸவுக்கு நீதிமன்றம் அழைப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

விமல் வீரவன்ஸவுக்கு எதிராக லஞ்ச – ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ் காய்ச்சல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டுள்ளார் என அவர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி அவர் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில், வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டதுடன், பிரதிவாதியை அன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அழைப்பாணையும் விடுக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரையில் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைக்கப்படாது

## உதய கம்மன்பில எம்.பி. கருத்து

“ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் மறுசீரமைக்காது. வெளிநாட்டு கடன் மறுசீரமைக்கப்பட்டால் வருடாந்தம் 3 பில்லியன் டொலர்களை செலுத்த நேரிடும்.”

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஹோமாகம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரம் இன்று வரை இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

கடன் மறுசீரமைப்புக்கு இலங்கையின் பிரதான கடன் வழங்குநரான இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

வெளிநாட்டு கடன் மறுசீரமைக்கப்பட்டால் வருடாந்தம் 3 பில்லியன் டொலர் அரச முறை கடன்கள் திருப்பி செலுத்த வேண்டும். வெளிநாட்டு கையிருப்பு 4 பில்லியனாக காணப்படுகின்ற நிலையில் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்துவது சாத்தியமற்றது.



வெளிநாட்டு கடன்களை செலுத்தினால் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதில் பாதிப்பு ஏற்படும்.

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெளிநாட்டு கடன்களை அரசாங்கம் மறுசீரமைக்காது.

சர்வதேச நாணய நிதியத்தின் வரி கொள்கையை மாத்திரம் முழுமையாக அமுல்படுத்தும் அரசாங்கம் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த அவதானம் செலுத்தவில்லை. கடன் பெறுதல், மிகுதியாகியுள்ள வளங்களை விற்பனை செய்தல் என்பன மாத்திரமே ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையாக காணப்படுகிறது.”– என்றார்.

# விவசாயிகளிடம் இருந்து ஒரு சதமேனும் தண்ணீருக்கு வரி அறவிடப்படமாட்டாது!

## அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி திட்டவட்டம்



“விவசாயிகளிடத்திலிருந்து தண்ணீருக்கு ஒரு சதமேனும் வரி அறவிடப் போவதில்லை. தண்ணீருக்கு வரி அறவிடப்படப் போவதாக கூறுவது அரசியல் கட்சிகளின் போலி பிரசாரம்.”

– இவ்வாறு நீர்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“விவசாயிகளிடத்திலிருந்து தண்ணீருக்கு ஒரு சதமேனும் வரி அறவிடப் போவதில்லை. இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக சிலர் குறிப்பிடுகின்றனர். அவ்வாறான எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

சட்ட ரீதியாக நீர் கொள்கையொன்றை ஏற்படுத்துவதற்கான அறிக்கையொன்றே வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தவிர்த்து இதற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு விவசாயிகளிடமிருந்து தண்ணீருக்கு வரி அறிவிட ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

இது அரசியல் கட்சிகளின் போலிப் பிரசாரமாகும். ஒருபோதும் நாம் விவசாயிகளிடமிருந்து தண்ணீருக்கு அல்லது வேறு எதற்கும் வரி அறிவிடமாட்டோம்.”– என்றார்.





# இந்து சமுத்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"இலங்கையின் கடல் பிராந்தியத்தையும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படை முகாமில் நேற்று இடம்பெற்ற இலங்கைக் கடற்படையின் விசேட கப்பல் படையணிக்கு ஜனாதிபதி வர்ணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்குச் சொந்தமான கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, நாட்டின் கடல்சார் இலக்குகளை நனவாக்குவதற்காக அர்ப்பணிக்கும் இலங்கை கடற்படையின் சிறப்புக் கப்பல் படையணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்ணங்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"இறுதி யுத்தத்தின் போது இலங்கை கடற்படை நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றியது. உயிர்த் தியாகம் செய்தவர்கள் மற்றும் இழக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான குறிப்புக்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. அதேபோல் வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கை கடல் பிராந்தியத்தினதும், இந்து சமுத்திரத்தினதும் பாதுகாப்பிற்காக கடற்படை அரப்பணித்துள்ளது. அது குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்து சமுத்திரத்திற்குள் நமது பொருளாதாரத் திட்டங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்த ஒருபோதும் இடமளியோம்.

மேலும், செங்கடலின் பாதுகாப்பிற்காக நமது கடற்படையை ஈடுபடுத்தத் தீர்மானித்தோம். 1967 இஸ்ரேல் – அரபு போரின் போது சுயஸ் கால்வாய் மூடப்பட்டதால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதனால் 10 வருடங்களாக கொழும்பு துறைமுகத்தின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தமையை நாம் அறிவோம்.

அதனால், இந்து சமுத்திரம், சுயஸ் கால்வாய், செங்கடலின் பாதுகாப்பிற்குமான ஒத்துழைப்புக்களை வழங்கி, நமது துறைமுகங்களின் பொருளாதார மதிப்பைப் பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகும். மேலும், எதிர்காலத்தில் நமது கடற்படை இந்த பணியில் வெற்றிகரமாக 06



















# இந்து சமுத்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

செயற்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

இன்று இந்த நிகழ்வு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் நடைபெறுகிறது. திருகோணமலை துறைமுகமானது இலங்கையில் மாத்திரமன்றி உலகிலேயே பிரதான துறைமுகமாக கருதப்படுகிறது. அனுராதபுரம் – பொலன்னறுவை காலங்களில் இத்துறைமுகம் முக்கியத்துவம் மிக்கதாக கருதப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது ஆசிய பிராந்தியத்தில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு இந்த துறைமுகமும் வழிவகுத்தது. எமது நாட்டிற்குச் சொந்தமான இந்தத் துறைமுகத்தைப் பாதுகாக்க வேண்டும். இதன்போது நாம் மத்தியஸ்தமாக செயற்பட வேண்டியதும் அவசியமாகும். இன்று முப்படைகளின் தளபதி என்ற வகையில் கடற்படை சிறப்பு கப்பல் படையணியைக் கண்காணிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதற்காக கடற்படையினருக்கும் அவர்கள் நாட்டிற்கு ஆற்றும்சேவைக்காகவும்நன்றிதெரிவிகிறேன்.” – என்றார்.









# தாய்லாந்துக் குழுவினரின் நிதி அன்பளிப்பு ‘கண்ணீரைத் துடைப்போம்’ திட்டத்துக்கு!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்பு



கொழும்பு கங்காராம விகாராதிபதி கலாநிதி வண. கிரிந்தே அஸ்ஸஜி தேரர் மற்றும் தாய்லாந்து பௌத்த குழுவினர் ஒன்றிணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த அன்பளிப்புத் தொகையை மிகவும் வறிய மக்களுக்கு உதவுவதற்காக ஜனாதிபதி நிதியம் முன்னெடுத்துள்ள “கண்ணீரைத் துடைப்போம்“ வேலைத் திட்டத்திற்கு பயன்படுத்துமாறு ஜனாதிபதி, தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தக் குழு இலங்கையின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காக மூன்றாவது முறையாக இவ்வாறான அன்பளிப்பை வழங்கியுள்ளதோடு, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மேற்படிக் குழுவினால் கொழும்பு கங்காராமயவிற்கு வழங்கப்பட்ட 200,000 அமெரிக்க டொலர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள 1,800 பௌத்த விகாரைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசு கட்சியின் தலைமையை ஒட்டி சிறீதரன் - சுமந்திரன் அணிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு நீதிமன்றம் வரை போக, விவகாரம் மாவைக்கு வாய்த்து விட்டது. தமது பத்து வருடத் தலைமைத் தர்பார் இன்னும் சில காலத்துக்குச் சிக்கலின்றி ஓடும் என்று அவர் மனப்பால் குடிக்கும் நிலைமை.

அதைத்தான் நம் நண்பர் இன்னொரு விடயத்துடன் ஒப்பிட்டார். கனகச்சிதமாகத் தமிழரசுக் கட்சி நாடகத்துடன் அதுவும் பொருந்திப் போனது.

மத்திய அரசின் கீழ் இருக்கும் யாழ் போதனா வைத்தியசாலையின் நிரந்தர பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி. அதற்கு மேலதிகமாக வடக்கு மாகாண சபையின் கீழ்வரும் சுகாதார அமைச்சின் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராகவும் அவரை நியமித்தனர். மத்திய அரசின் அதிகாரியிடம் மாகாண சபையின் நிர்வாகத்தைக் கையளிப்பதா? இது பகிரப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசு மீளப் பறிக்கும் உத்தி என்றெல்லாம் குரல் எழுப்பப்பட்டது. சர்ச்சை கிளப்பப்பட்டது.

இதனால் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவுக்கு நேர்முகத் தேர்வு என்றார்கள் - தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தல் மாதிரி.

பழைய பெரும்பான்மை இனத்தவர் ஒருபுறம், மன்னாரில் பணியாற்றும் நம்மவர் மறுபுறம் என்று நேர்முகத் தேர்வில் இழுபறி நேர்ந்தது - சுமா, சிறீ இழுபறி போல.

கடைசியில் நேரமுகத் தேர்வு இடம்பெற்று ஒருவர் தேர்வாகி விட்டார், இதோ நியமனம் என்றனர். சிறீதரன் தேர்வானது மாதிரிப் போலும்.

இத்தனை விடயங்களையும் இரகசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தவர் ஒரு பக்கத்தைக் கிள்ளிவிட அவர்கள் நேர்முகத் தேரவின் புள்ளியிடலில் ஒரு விடயத்திற்குக் குறைந்த புள்ளி வழங்கப் படுவதை ஏற்க முடியாது என வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த விடயம் வடக்கு மாகாணப் பணிப் பாளருக்கு மட்டுமானதல்ல. நாட்டின் ஒன்பது மாகாணப் பணிப்பாளர் நியமனத் துற்கும் பொருத்தமானது என்பதனால் அனைவரும் அதில மூழ்கி விட்டனர். இதனால் தற்போது வழக்குத் தீர்ப்பிற்காக சுகாதார அமைச்சுக் காத்திருக்கின்றது - தமிழரசு நீதிமன்ற முடிவுக்குக் காத்திருப்பது போல.

இங்கும் இடம்பெற்ற நேர்முகத் தேர்வு பிழை என ஏற்றுக்கொண்டால், மீண்டும் முதலிலிருந்து நேர்முகத் தேர்வு இடம்பெற வேண்டும். இடம்பெற்ற முறையை சரியென வாதிட்டால், தீர்ப்பு வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அதனால் தற்போதைய மாகாண சுகாதார பதில் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தியின் இருப்பு சில காலத்திற்கு அசைக்க முடியாது என்கின்ற நிலை வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் ஏற்பட்டு விட்டது. - மாவையின் கையில் தமிழரசு விழுந்த மாதிரி என்றார் அந்த நண்பர்.

எப்படி தமிழரசுக் கட்சியின் வழக்கிற்கு தீர்வு எட்டுவது கடினமோ, அதேபோன்றே தற்போது வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நியமனம் தொடர்பான தாவாவுக்கும் தீர்வு எட்டுவதும் கடினம் தான்...!

அதனால், மாவையைப் போல டாக்டர் சத்தியமூர்த்தியின் காட்டிலும் மழைதான் போலும்...!

## சாந்தனின் பூதவுடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். வடமராட்சி - உடுப்பிட்டியில் அமைந்துள்ள சாந்தனின் இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்று நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நாளை இறுதிக்கிரியைகள் இடம்பெற வாய்ப்பில்லை என்று நேற்று இரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாந்தனின் பூதவுடல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரே இறுதிக்கிரியைகள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் தொடர்பில் முடிவு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைதாகி 33 வருடங்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட சாந்தன், பல போராட்டங்களின் பின்னர் தாயகம் திரும்ப விருந்த நிலையில், கடந்த புதன்கிழமை காலை சென்னை ராஜீவ் காந்தி அரச மருத்துவமனையில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

அவரின் பூதவுடல் நேற்று முற்பகல் 10.20 மணிக்குச் சென்னையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த விமானத்தில் எடுத்து வரப்பட்டது. அந்த விமானம் முற்பகல் 11.40 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

பூதவுடல் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் விமான நிலையப் பொதிக் காப்பகப் பகுதிக்கு மாற்றப்பட்டது. அங்கிருந்து பூதவுடலைப் பெறுவதற்காக உறவுகள் சென்ற வேளை அதைப் பெறுபவர் பெயரில் சாந்தன் என்று சென்னையில் உள்ள விமானச்சிட்டை நிறுவனம் குறிப்பிட்டிருந்த காரணத்தால் பூதவுடலை உறவுகளால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்த நெருக்கடியைச் சென்னையில் இருந்து வந்த சட்டத்தரணி, சென்னையுடன் தொடர்புகொண்டு சரியான முறையில் ஆவணத்தைத் தயாரித்து அதனைத் தொலைநகல் மூலம் பெற்றார். அதன்பின்னர் பூதவுடல் நீர் கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது மாலை 6 மணியைத் தொட்டுவிட்டது.

இதன் பின்பு இரவே நீதிபதி பார்வையிட்டு மரண விசாரணைக்கு உத்தரவிட்டார். நீதிபதியின் உத்தரவின் பிரகாரம் மரண விசாரணைக்குக் குடும்ப உறவுகள் இருவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை இடம்பெறும் மரண விசாரணையின் பின்பே பிரேத பரிசோதனை மேற்கொண்டு அதன் அறிக்கை சட்ட வைத்திய அதிகாரியால் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு சட்ட வைத்திய அதிகாரி வழங்கும் சான்றிதழை மீண்டும் நீதிபதியிடம் சமர்ப்பித்து அனுமதி வழங்கப் பட்ட பின்பே பூதவுடல் உறவுகளிடம் ஒப்படைக்கப்படும். இதனால் பூதவுடல் யாழ்ப்பாணம் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## இலங்கை விமானப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமானப் படைத் தளபதியின் ஆலோசனைப்படி ஐக்கிய நாடுகள் அமைப்பின் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளில் உள்ளடங்கலான தரமான கல்வி, பசுமையான சுற்றுச்சூழல் ஆகிய இலக்குகளை முதன்மைப்படுத்தி சமூக சேவைகள் பல "நட்பின் சிறகுகள்" எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு வடக்கு மாகாணத்தை முதன்மைபடுத்தி இடம்பெறுகின்றன.

இவற்றுள் வடக்கு மாகாணத்தில் இனங்காணப்பட்ட பின்தங்கிய 73 பாடசாலைகளைப் புனர்நிர்மாணம் செய்தல், வடக்கு மாகாண பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை உயர்த்திடும் வகையில் அவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்கள், கடந்தகாலப் பரீட்சை வினாத் தாள்கள் அடங்கிய புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகாரணங்கள் ஆகியவற்றை வழங்கிவைப்பதற்கான "எனது புத்தகமும் வடக்கில்" எனும் தொனிப்பொருளில் 73 ஆயிரம் புத்தகங்களை நன்கொடையாக வழங்கும் திட்டமும் ஆரம்பமாகியுள்ளது.

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணமும் இதுவரை கண்டறியப்படவில்லை.

சடலத்தை அடையாளம் காண்பதற்கான விசாரணைகளைத் துறைமுகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெருமளவானோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 10ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்வார்கள் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டியிடமாட்டார் என்றும் அவர் கூறினார்.

அண்மைய நாட்களில் சில அரசியல் கட்சித் தலைவர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார்கள் என்று தெரிவித்த அவர், எண்பதுக்கும் மேற்பட்ட குழுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சர்ச்சையில் காற்றாலைத் திட்டம்

இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் புள்ளியான அதானிக்குச் சொந்தமான அதானி குழுமத்தின் மன்னாரில் மேற்கொள்ளவிருந்த இரண்டாம் கட்டக் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் இப்போது பெரும் நெருக்கடியைச் சந்தித்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஏற்கனவே அந்தத் திட்டத்திற்கு அப்பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புக் காட்டி வருகின்றனர்.

இப்போது இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அனுமதி அளித்தால் அதற்கு எதிராக நீதிமன்றுக்குப் போய் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்போம் என்று வனவிலங்குகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்பு சங்கம் கொழும்பில் ஊடக மாநாடு நடத்தி பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

இந்த விடயத்தை ஒட்டி தமது அமைப்பு சுட்டிக்காட்டி உள்ள - சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற - விடயங்கள் குறித்து மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை உரிய கவனம் எடுக்கத் தவறுமானால் அது தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப் பின்நிற்க மாட்டோம் என்று வனவிலங்குகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்பு சங்கம் எச்சரித்திருக்கின்றது.

இந்தக் காற்றாலை மின் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் வருடாந்தம் நூற்றியைம்பது இனங்களைச் சேர்ந்த பத்து லட்சத்துக்கும் (ஒரு மில்லியனுக்கும்) அதிகமான புலம்பெயர் பறவைகள் நேரடியாகப் பாதிக்கப்படும் ஆபத்துள்ளது என்று அந்த அமைப்பு மதிப்பீடு செய்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

மத்திய ஆசியப் பறப்புப் பாதையில் தெற்கை இலக்காகக் கொண்டு முப்பது நாடுகளில் இருந்து சுமார் 250 இனங்களைச் சேர்ந்த ஒரு கோடி 50 லட்சம் பறவைகள் வருடாந்தம் இலங்கைக்கு வருகின்றன.

இவற்றில் 150 இனங்களைச் சேர்ந்த சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான புலம்பெயர் பறவைகள் மன்னார் பாதை வழித்தடத்தில் வருடாந்தம் வலசை போகின்றன.

மேலும் இது ஒரு முக்கிய குளிர்கால சரணாலய மையமாகவும் செயல்படுகின்றது.

மேலும் அழிவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பறவை இனங்கள் என அடையாளம் காணப்பட்ட 26வகையானபறவைஇனங்கள் இனப்பெருக்கம் செய்யும் இடமாக இந்தப் பிரதேசம் உள்ளது என மேற்படி வனவிலங்குகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்பு சங்கம் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

மேற்படி மன்னார் பறப்பு வழித் தடத்தில் வரவிருக்கும் உத்தேச 50 டேர்பைன் காற்றாலை மின் திட்டத்தால் அந்தப் பறவை இனங்கள் அனைத்தும் பாதிக்கப்படும் அல்லது அழிக்கப்படும் ஆபத்து நேரும் என்று பேராசிரியர் சம்பத் செனிவிரத்தின தெரிவித்திருக்கின்றார்.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பாக சுற்றுச்சூழல் கவலைகள், பாதிப்புகள், கரிசனைகள் இருக்குமாயின் அவை குறித்து அறிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளை வரும் ஆறாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை கோரி இருக்கின்றது.

அதன்படி பாதிப்புகள் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கை அந்தத் தினத்துக்கு முன்னர் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபைக்குக் கையளிக்கப்படும் என்று மேற்படி வனவிலங்குகள் மற்றும் இயற்கைப் பாதுகாப்புக் கழகத்தின் சார்பில் மூத்த பல்லுயிர் விஞ்ஞானி கலாநிதி பிரஷாந்த் பெத்தியகொட கூறி இருக்கின்றார்.

மேற்படி உத்தேச 250 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார சமநிலைக்கு குறிப்பிடத்தக்க அபாயங்களை ஏற்படுத்தும் என்று பேராசிரியர் சம்பத் செனிவிரத்தின விளக்குகின்றார்.

“முழுமை அடையாத - பூரணத்துவம் பெறாத - விதிமுறைக் குறிப்புக்களின் கீழ் இந்தக் காற்றாலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் முக்கிய சட்டங்களை மீறும் விதத்திலும், முக்கிய பங்குதாரர்களுடன் ஆலோசனை கலக்காமலும், வனவிலங்கு ப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிபுணத்துவம் மிக்க மேற்பார்வையின்றியும் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரத்தை நமது அறிக்கையில் விவரமாகச் சுட்டுவோம்” - என்று சுற்றுச்சூழலியல் விவகாரங்களில் ஈடுபாடு உள்ள சட்டத்தரணி ஜகத் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் அதானி குடும்பத்தின் மன்னார் காற்றாலைத் திட்டம் முன்னேறுவதற்கு எதிர்பாராத தரப்புகளில் இருந்து எல்லாம் எதிர்ப்புக்கள் வலிமையாக வந்து கொண்டே இருக்கின்றன எனத் தெரிகிறது.




**1. உரலார் கேள்வி :- ஆயிரம் தான் சொன்னாலும், தமிழரசுக்கட்சிதான் தமிழர்களின் தலைமைக் கட்சி என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. வரலாற்றுத்தொன்மை, வடக்குக் கிழக்கு மக்களின் ஒருமித்த ஆதரவு, ஆயுதப் போராட்டத்திற்கு முன்பிருந்தே தமிழ் மக்களை வழி நடத்தும் தகுதி, உலக அங்கீகாரம் எனப் பலவிதத்தாலும் மற்றைய தமிழ்க் கட்சிகளை விடத் தமிழரசுக்கட்சி முதன்மை பெற்றே விளங்குகின்றது.**

**அத்தகைய பெருமை பெற்ற அக்கட்சி, உட்பகையாலும், பதவிப் போட்டியாலும், சுய நலத்தாலும், நாளுக்கு நாள் நம் கண் முன்னாலேயே சிதைவுற்று வருகிறது. 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய்' கட்சியின் நிலை மாறி இருக்கிறது.**

**இந்நிலையில் இப்போது புதிதாகத் தோன்றி இருக்கும் சிறீதரனுக்கும், சுமந்திரனுக்கும் இடையிலான பதவிப் போட்டி விளைவித்திருக்கும் உட்பூசல், 'வீட்டினை' முற்றாக இடித்து விடும் போல் தெரிகிறது.**

**இந்நிலையில் உங்களைப்போன்ற சமூகப் பொறுப்புள்ள நடுநிலையாளர்கள், இப்பிரச்சினையில் தலையிட்டு இவ்விருவரையும் சமாதானம் செய்து, பழைய இக்கட்சிக்குப் புத்துயிர் கொடுக்கச் செய்ய முடியாதா?**



**உலக்கையார் பதில் :-** சிறிய கேள்விகளுக்கே இவர் பந்திபந்தியாய்ப் பதிலளிக்கிறார் என்று சிலர் என்மேல் குறைபட்டுக் கொண்டிருக்க, நீங்கள் கேள்வியையே பந்திபந்தியாய் விரித்திருக்கிறீர்கள். விடை நீண்டால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு.

எங்கள் தலைவர்கள் எல்லோரும் தங்களுக்கான ஆதரவாளர்களை மட்டுமே விரும்புகிறார்கள். நடுநிலையாளர்களை அவர்களுக்குப் பிடிப்பதில்லை. ஒருவர் தனது பிழையை வெளிப்படையாகச் சொல்லிக் கண்டித்தால், அவர் தனது எதிரியின் ஆதரவாளர் என்பதே இன்றைய தலைவர்கள் வைத்திருக்கும் பொது விதி.

எப்பொழுதும் ஒரு சமூகத்தில் நடுநிலையாளர்கள் அவசியம் தேவை. ஓர் பிரச்சினையில் உண்மையை எடுத்துரைக்க, அத்தகைய நடுநிலையாளர்களால் தான் முடியும். தத்தமக்கு பிரச்சினை வரும்போது தான் நடுநிலையாளரின் அவசியத்தைப் பலரும் உணர்ந்து கொள்கிறார்கள்.

என்னைச் சமூகப் பொறுப்புள்ள நடுநிலையாளர் என்று உரைத்தமைக்காக, முதலில் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். சிலர் என்னைச் சுமந்திரனின் ஆதரவாளர் என்றும், முன்னாள் முதலமைச்சரின் பகைவர் என்றும் முத்திரை குத்தி வருகின்றனர். நான் யாருடைய பகைவனும் அல்லன். யாருடைய ஆதரவாளனும் அல்லன். எங்கள் இனம் உயர வேண்டும் எனும் விருப்பால், நல்லவற்றை யாரிடம் கண்டாலும் பாராட்டுகிறேன். தீயவற்றை எவரிடம் கண்டாலும் பயமின்றிக் கண்டிக்கிறேன். அவ்வளவே!

இவ்வளவும் முன்னுரை. இனி உங்கள் கேள்விக்கான பதில் வருகிறது.

இந்தப் பதவிப் போட்டி தொடங்கிய பொழுதே, 'உரலார் கேள்வி-பதிலில்' எனது அபிப்பிராயத்தை வெளிப்படையாய் நான் உரைத்திருந்தேன். சுமந்திரனுக்கும், ஸ்ரீதரனுக்கும் அவரவர்க்கே உரித்தான சில தகுதிகள் இருக்கின்றன. இதை முதலில் அவர்களும், நாங்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடந்த தேர்தலில், தமிழரசுக்கட்சியின் முக்கிய இளைய தலைவர்களான இவ் இருவரும், கைகோர்த்து நின்று நல்லதொரு முன்னுதாரணத்தை எடுத்துக் காட்டினார்கள். ஏனோ இம்முறை அவர்களே அதனைச் சிதைய விட்டிருக்கிறார்கள்.

ஆற்றல்களைச் சிதைய விடக் கூடாது. ஒன்று சேர்த்துப் பலப்படுத்த வேண்டும். இன்று நம் இனம் இருக்கும் நிலையில் இது அவசியத்திலும் அவசியம். இங்கு தலைவர்களில் பிரச்சினை இல்லை. அவர்களுக்குக் 'காவடி' தூக்குபவர்கள்தான் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஒன்றாய் இருந்த சுமந்திரனையும், சிறீதரனையும், 'வால் முறுக்கிவிட்டு'ப் பிரச்சினையை கிளப்புபவர்கள் இவர்கள்தான்!. துரதிர்ஷ்டவசமாய் நம் தலைவர்களும் இந்த 'வால் முறுக்கல்களுக்கு'ப்

**(10ஆம் பக்கம் பார்க்க)**

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலியாகி பகை வளர்க்கத் தயாராகி விடுகிறார்கள்.

காட்டுக்கு வந்த இராமனை முனிவர்கள் சூழ்ந்து விருந்தளிக்கிறார்கள். அப்போது வேட்டுவக் குகன் அங்கு வருகிறான். தாழ்த்தப்பட்டவனான அவனது வருகை, முனிவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள், இராமன் தமது கருத்தினை உணர்ந்து குகனை விலத்தி விடுவான் என எதிர்பார்க்கிறார்கள். சமூக அந்தஸ்து, தவவலிமை, அறிவாற்றல் என்ப வற்றால் பெரியவர்களாய் இருந்த முனிவர்களின் கருத்திற்கு உடன்பட்டிருந்தால் இராமனை அவர்கள் 'தூக்கிப் பிடித்திருப்பார்கள்'.

இராமன் சுயமுள்ள ஒரு தலைவன். அதனால் அவன் முனிவர்களின் கருத்திற்குத் தன்னை ஆளாக்காமல், வந்த குகனைத் தானும் அங்கீக ரித்து, முனிவர்களையும் அங்கீகரிக்கும்படி செய் கிறான். அதனால்தான் அவன் பெருமை பெறு கிறான்.

நம் தலைவர்களில் பலருக்குச் சரியான முடி வெடுத்து, 'வால்பிடிகளுக்கு' எடுபடாமல் சுயமாக இயங்கும் அத்தகைய மனவலிமை இல்லை. அது தான் பிரச்சினையே!

முன்பு சொன்னதையே மீளவும் உரைக்கின் றேன். சுமந்திரனிடமும், சிறீதரனிடமும் இருக்கும் தனித் தகுதிகள் ஒன்றிணைந்தால், தமிழரசுக்கட்சி மட்டுமல்ல, நம் தமிழினமும் நிச்சயம் பயன்பெறும். அவ்விருவரின் உறவிலும் தேவையில்லாத பகைக் கீறு விழுந்து விட்டது. முதலில் அதை நீக்க வேண்டும்.

அவ்விருவரும் உண்மையான இனப்பற்று உள்ளவர்கள். பெருந்தன்மை மிக்கவர்கள். அத னால் விட்டுக் கொடுப்பதில் அவ்விருவருக்கும் ஆட்சேபனை இருக்காது என்று நம்புகிறேன். தம்மைச் சூழ இருக்கிறவர்களுக்கு இன நன்மை பற்றி எடுத்துச் சொல்லி அமைதிப்படுத்திவிட்டு, அவ்விருவரும் நீங்கள் சொன்னாற் போன்ற சமூக அக்கறையுள்ள நடுநிலையாளர்கள் முன்னி லையில் மனம் விட்டுப் பேசினால், விழுந்திருக்கும் பகைக் கோடு, நீரில் கிழித்த கோடு போல் தானாக மறைந்து விடும்.

இவ்விருவரும் என் நண்பர்கள் என்ற வகையில், அவர்களுக்கு ஒன்றை அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். 'பிழையான ஒரு படியில் தெரியாமல் கால் வைத்து விட்டீர்கள்! மற்றவர்கள் தூண்டத் தூண்ட, அடுத்தடுத்த படிகளிலும் ஏற முனை வீர்க ளேயானால், பிறகு நீங்கள் நினைத்தாலும் முதல் நிலைக்கு மீள வர முடியாது என்பது மட்டும் நிச்சயம்! இப்போட்டியில் வெல்லப் போகிறவரும் சரி, தோற்கப் போகிறவரும் சரி சந்தேகத்திற்கு இடமில்லாமல் இனத்தை அழித்த பாவத்திற்கு ஆளாவார்கள் என்பது மட்டும் உறுதி. அது நடந்து விட்டால் வரலாறு உங்களை ஒருக்காலும் மன் னிக்காது.'

என்னைக்கேட்டால் நடுநிலையாளர் ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் முன்னிலையில் தமது முக்கிய ஆதரவாளர் ஒரு சிலரோடு மட்டும் இருந்து இவர்கள் பேச முன்வர வேண்டும். அப்பேச் சில் எடுக்கும் முடிவில் எக்காரணம் கொண்டும், எவர் தூண்டினாலும் மாற்றங்கள் செய்யக்கூடாது. இந்த முடிவிற்கு இவ் இருவரும் உடன்படுவார்களா னால், அந்தச் சந்திப்பை ஏற்படுத்தக் கம்பன் கழகம் என்றும் தயாராக இருக்கிறது.

**சல்லடையார் சலிப்பு :- நல்லதீர்வு! நடக்குமா? நடக்க விடுவார்களா?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. உரலார் கேள்வி :- அரசியல்வாதிகளுக்குப் பேச்சாற்றல் அவசியம் என்று கருதுகின் றீர்களா?**

**உலக்கையார் பதில் :-** நான் கருதுவது ஒருபக்கம் இருக்கட்டும். திருவள்ளுவரே அரசியல்வாதிகளுக் குப் பேச்சாற்றல் அவசியம் என்று கருதுகிறார். அதனால்தான் தன்னுடைய குறள் நூலில், அரசியல் பற்றி உரைக்கும் பொருட்பால் பகுதியில் 'சொல் வன்மை' என்று ஓர் அதிகாரத்தை அவர் வைத் திருக்கிறார்.

செயலாற்றும் திறன்மிக்க ஒரு நிர்வாகியின் ஆளுமைக்கு, பேச்சாற்றல் அவசிய கருவியாகும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. உலக அரங்கில் புகழ்பெற்ற அரசியல்வாதிகள் பலர் சிறந்த பேச்சாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள் என்பது வரலாறு. வின்ஸ்ரன் சேர்ச்சில் முதல் நம் இந்திரா காந்தி அம்மையார் வரையிலான பல தலைவர்கள் இவ்வுண்மைக்குச் சான்றாய் விளங்கியிருக்கிறார்கள்.

தான் முன்னின்று நடாத்தி வெற்றி பெற்ற உலகப் போரின் முடிவில், பிரிட்டனில் நடந்த



தேர்தலில் சேர்ச்சில் தோற்கடிக்கப்படுகிறார். அப் பொழுது அவரைச் சூழ்ந்து கொண்ட பத்திரிகை யாளர்கள், 'இத்தனை பாடுபட்டுப் போரில் வெற்றி யீட்டிய உங்களை மக்கள் தோற்கடித்து விட்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டனராம். அதற்கு சேர்ச்சில், 'இந்தச் சுதந்திரம் மக்களுக்கு இருக்கவேண்டும் என்பதற்காகத்தானே அந்தப் போரை நான் நடாத்தினேன். அதனால் இந்தத் தோல்வியிலும் நான் வெற்றியை உணர்கிறேன்' என்றாராம். அவரது சொல்வன்மைக்கு ஓர் சான் றான சம்பவம் இது.

சீக்கியர்களது பொற்கோவிலுக்குள் இராணுவத்தை அனுப்புவது என்று முடிவானதும், இந்திராகாந்தி அம்மையார் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போது, 'இது என் மக்களுக்கு எதிராகவே நான் செய்யவேண்டிய போராகிவிட்டது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்னை இத்தகைய ஓர் துரதிர்ஷ்ட முடிவுக்குள் தள்ளிவிட்டன. அதனால் மனப் பதற்றத்தோடும், அளவற்ற வருத்தத்தோடும் நாட்டு மக்களின் நன்மைகருதி இறைவனைப் பிரார்த்தித்தபடி இச் செயலில் இறங்குகிறேன்.' என்றாராம்.

சீக்கியர்கள் போரினால் காயப்பட்டாலும், தன் வார்த்தைகளால் காயப்படக்கூடாது என நினைந்து, தேடி எடுத்த வார்த்தைகளால், நிதானத்தோடு அம்மையார் விட்ட இந்த அறிக்கையும் சொல் வன்மைக்குச் சான்றான ஓர் அறிக்கையே! (நம்நாட்டில் தமிழர்களை அழித்துவிட்டு வெற்றி விழாக் கொண்டாடிய தலைவர்கள் நினைவில் வருகிறார்கள்).

தமிழ்நாட்டிலும், பேச்சு வன்மை என்ற ஓர் ஆயுதத்தை மட்டும் வைத்துக் கொண்டே, காமராஜ் போன்ற பெருந்தலைவர்களையெல்லாம் திராவிடக் கழகத்தினர் வீழ்த்தியிருக்கிறார்கள். அந்தத் திராவிடக் கழகத் தலைவர்களின் வரிசை, 'முத்தமிழறிஞர்' கலைஞர் கருணாநிதியின் இருப்பு வரை தொடர்ந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமுறை சட்ட மன்றத்தில் ஒரு பெண் உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டிப்பதற்காக, 'இம்முறை தேர்தலில் 'உதயசூரியனை' உதிக்க விடாமல் செய்வோம்' என்றாராம்.

அவரது அந்தக் கருத்தை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கலைஞர், அந்த அம்மையார் பேசி முடிந்ததும் எழுந்து, 'சூரியன் உதிப்பதால் திருடர்களுக்கும், பரத்தையர்களுக்கும் தொழில் கெடும். அதனால் அவர்கள்தான் உதயசூரியன் உதிப்பதை விரும்பமாட்டார்கள். அம்மையார் இதில் எந்த ரகமோ?' எனக் கேட்க, சபை அதிர்ந்ததாம். இப்படிக் கலைஞரின் பேச்சாற்றலுக்குச் சான்றாக பலரும் பலவிதமான செய்திகளையும் சொல்கிறார்கள்.

திராவிடக் கழகங்களைப் பொறுத்தவரை, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், வை.கோ. போன்ற பல தலைவர்கள், பேச்சாற்றலில் வல்லவர்களாய் இருந்திருக்கிறார்கள். அந்த ஆற்றலினால் செயலாற்றல் மிக்க பல தலைவர்களையே அவர்களால் வெற்றி கொள்ள முடிந்திருக்கிறது.

இன்று, திராவிடர் கழகங்களில் மேற்சொன்னவர்கள் போன்ற பேச்சாற்றல் மிக்கவர்களின் தொகை தேய்ந்து கொண்டே போகிறது. தற்போதைய முதல்வர் ஸ்டாலின், அவருக்கு அடுத்து சிம்மாசனம் ஏறத் தயாராக நிற்கும் உதயநிதி போன்றவர்களது பேச்சாற்றல் மிகச் சுமாராய்த்தான் இருக்கிறது. அங்குள்ள மற்றைய கட்சித் தலைவர்களின் நிலையும் பெரும்பாலும் அதுவேதான்.

இன்று இரண்டு பேர்தான், அங்கு மக்கள் மனதைப் பேச்சால் கவர்ந்து வருகிறார்கள். ஒருவர் சீமான். மற்றவர் அண்ணாமலை. சீமானது ஆற்றல் சொல்லை மட்டும் நம்பியிருப்பது. அண்ணாமலையின் ஆற்றல் சொல்லோடு கூடிய செயலையும் நம்பியிருப்பது. பேச்சாற்றலில் போட்டி என்று வந்துவிட்டால் சீமான் அண்ணாமலையை விட வெகுதூரம் முன்னே நிற்பார். ஆனால் பேச்சாற்றலினூடு செயலாற்றல் என்று வருமானால் அண்ணாமலை சீமானைவிட வெகு தூரம் முன்னே நிற்பார்.

அவ்வளவு தூரம் போவானேன். நம் நாட்டிலும் பேச்சாற்றலில் தலைசிறந்து நின்ற பல தமிழ்த் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இராஜதுரை, தர்மலிங்கம், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் போன்றவர்கள் எல்லாம், தமது பேச்சாற்றலால், மாற்றார் சபைகளைக் கூட தம் வயப்படுத்திய அதிசயக் காட்சிகளை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

பின்னாளில் போராளிக் குழுக்கள் வந்த பிறகு, பேச்சுத் திறனுக்குப் பெரிய முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது. எனக்குத் தெரிந்து அக்காலத்தில் ஒரு சபையைத் தன் கருத்துக்கு உடன்பட வைக்கும் வலிய பேச்சாற்றலைக் கொண்டிருந்தவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஒருவர்தான்.

இன்று நம் தமிழ்த் தலைவர்களில் பேச்சாற்றல் மிக்கவர் என்று ஒருவரைக்கூட என்னால் அறுதியிட்டுச் சொல்லமுடியவில்லை. பேச்சாளர்களின் முகாமாக இருந்த தமிழரசுக் கட்சிகூட இன்று சிறந்த பேச்சாளர்கள் அற்று வரண்டுபோய்க் கிடக்கிறது. பேச்சாற்றல் வரண்டு போனால் கூட பரவாயில்லை. நம் தலைவர்களிடம் செயலாற்றலும் வரண்டு போவதைக் காணத் தான் கவலையாய் இருக்கிறது.

**சல்லடையார் சலிப்பு :- பேச்சாற்றல் பற்றிய ஒரு பேச்சாளரின் கணிப்புக்கள் இவை. இதனை முழுவதும் சரி என்று சொல்ல முடியாது. ஏன்? இன்றும் கூட நம் மத்தியில் வெறும் வாய்ச் சொல் வீரர்களான பல தலைவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள் - இது எப்பூபூடி?.......**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :- அண்மையில் நீங்கள் கேட்டு வியந்த ஒரு பேச்சினைப் பற்றிச் சொல்ல முடியுமா?**

**உலக்கையார் பதில் :-** அண்மையில் ஓர் அரசியல் தலைவரின் பேச்சாற்றலைக் கேட்டு வியந்து போனேன். அவர் ஒரு தமிழ்ப் பேச்சாளர் அல்லர். வடநாட்டுப் பேச்சாளர். அவர் யார் என்கிறீர்களா? பாரத நாட்டின் மதிப்பிற்குரிய பிரதமர் மோடியைத்தான் சொல்கிறேன்.

சில தினங்களுக்கு முன்பு, நெல்லையில் வந்து மோடி பேசிய பேச்சென்பது, ஒரு சிறந்த பேச்சுக்கான 'மொடல்'ஆக அமைந்திருந்தது.

தான் பேசும் இந்தி தெரியாத தமிழ்நாட்டு மக்களை, உணர்வு ரீதியாக அவர் கவர்ந்த விதம் கண்டு பெரும் ஆச்சரியப்பட்டேன்.

வழக்கம்போல தமிழ் வணக்கத்தை ஹிந்தி தொனியில் சொல்லி அவர் பேச்சினைத் தொடங்கிய போது வழக்கமான ஒரு பேச்சாகத்தான் அது இருக்கப் போகிறது என நினைந்தேன். ஆனால் மனிதர் தொடர்ந்த தனது பேச்சில் அடுத்தடுத்து 'சிக்சர்களாக' விளாசத் தொடங்கினார்.

எடுத்தாற்போல திருநெல்வேலி அல்வா, நெல்லையப்பர், காந்திமதியம்மா என மக்களின் உணர்வில் பதிந்த விடயங்களைத் தொட்டு சபையைத் தன்வயப்படுத்தினார். அவர் தொடர்ந்து பேசப்பேச கூடியிருந்த மக்கள் பாஷை தெரியாமலே, அவர் காட்டிய பாவங்களால் ஈர்க்கப்பட்டு உணர்ச்சிவயப்பட்டதை நேரில் காண முடிந்தது.

ஆயத்தப்படுத்திய பேச்சொன்றைப் போல தனது முழுப்பேச்சையும் நிரல்படுத்தி அவர் பேசிய விதம் வியப்பைத் தந்தது.

மக்களை முழுதாகத் தன்வயப்படுத்திய பின்பு, எதிரணிகளையெல்லாம் பந்தாடித் தள்ளிவிட்டு, பேச்சினுடைய உச்சத்தில், 'இந்த மோடி இருக்கும் வரை யாரும் உங்களை வீழ்த்த விடமாட்டேன்.' என்று ஆணித்தரமாக உறுதி தந்து, மக்களை உணர்ச்சிவயப்பட வைத்த அவர், திடீரெனக் குரலைத் தாழ்த்தி உங்களோடு உங்களின் பாஷையில் பேச முடியாமல் இருப்பதை எண்ணி வருத்தப் படுகிறேன் என்று சொல்ல, மக்கள் உணர்ச்சிவயப்பாட்டின் உச்சத்தைத் தொட்டு ஆரவாரித்தார்கள்.

ஓர் சிறந்த பிரதமர் என்ற தகுதிக்கு அப்பால் ஒரு சிறந்த பேச்சாளராகவும் அன்றைய அவரது பேச்சு அவரை இனங்காட்டிற்று. தமிழ்நாட்டவர்கள்




பேச்சின் வன்மை அறிந்து இரசிப்பவர்கள் என்பதை நான் அறிவேன். மோடியின் அன்றைய பேச்சும் தமிழர்களால் ஆரவாரித்து அங்கீகரிக்கப்பட்டது. தமிழ் நாட்டு அரசியலில் மோடியின் அன்றைய பேச்சு, நிச்சயம் ஒரு மைல் கல்லாக அமையப் போகிறதென்றே கருதுகிறேன்.

**சல்லடையார் சலிப்பு :-வாரிதியார் மோடி மேல் மோடி கொள்கிறார்**




# இல்மனைட் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருக்கோவில் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்!

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற இல்மனைட் அகழ்வைத் தடை செய்யக்கோரி நேற்று வெள்ளிக்கிழமை பிரதேசப் பொதுமக்கள் பிரதேச செயலகத்தின் முன்னால் ஆர்பாடத்தில் ஈடுபட்டனர்.

இல்மனைட் அகழ்வுக்கு தடைசெய்யப்பட்டிருந்த நிலையில் தடையை மீறி மீண்டும் அகழ்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதை அறிந்த மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து நேற்றுக் காலை திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரத்தின் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், தவராசா கலையரசன் மற்றும் முள்ளாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றிணைந்தனர்.

இதன் போது இல்மனைட் அகழ்வை உடன் நிறுத்து, எங்கள் வளம் எமக்கு வேண்டும், எங்கள் வளங்களைச் சுரண்டாதே கொள்ளையர்களே வெளியேறு, இல்மனைட் அகழ்வைத் தடை செய் – என்பன போன்ற சுலோகங்கள் ஏந்திவாறு கோசங்களை எழுப்பி அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலமாக பிரதேச செயலகத்திற்கு முன்னால் சென்று அங்கும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து அங்கு சென்ற பிரதேச செயலாளரிடம் அவர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அந்த்ச்ப் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் பிரதேச மக்களின் எதிர்ப்பின் காரணமாக பிரதேச அபிவிருத்திக் குழு மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தீர்மானங்களுக்கு அமைய அது தடை செய்யப்பட்டிருந்தது. தற்போது அத்தீர்மானங்களை மீறி மீண்டும் அகழ்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதை நிறுத்தவேண்டும் என மகஜரில் கோரப்பட்டிருந்தது.

இதன்போது கருத்து வெளியிட்ட பிரதேச செயலாளர் –

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நிலவுகின்ற இந்தப் பிரச்சினை தொடர்பில் பிரதேச சபையோ, பிரதேச செயலகமோ எவ்வித அனுமதியும் இதுவரை வழங்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் இதற்கு முன்னரும் மக்களால் மகஜர் வழங்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வழங்கப்பட்ட மகஜர் தொடர்பிலும் மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும்.– என்று தெரிவித்தார்.

பிரதேச செயலாளரின் உறுதிமொழியையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.















# காத்தான்குடியில் இரவில் கூடிய 30 பேர் கைது; அதனால் பதற்றம்

## 23 மோ.சைக்கிள்கள், ஓர் ஓட்டோவும் தடுப்பு

(கனகராசா சரவணன்)

உயிர்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஸாரான் காசிம் சாகோதரியின் கணவர் மற்றும் 4 பேர் உட்பட 30 பேரை காத்தான்குடியில் வீடு ஒன்றில் சட்டவிரோதமாக கூட்டம் நடத்திய சந்தேகத்தின் பேரில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் பொலிஸார் கைது செய்துள்ளனர். 23 மோட்டர் சைக்கிள்கள், ஓட்டோ ஒன்று ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களின் வீடுகளுக்குப் பொலிஸார் சென்று விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையை அடுத்து பிரதேசத்தில் பெரும் பரபரப்பு எற்பட்டுள்ளது.

இது பற்றி தெரியவருபவை வருமாறு:-

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றிற்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு உயிர்த்த ஞாயிறு பிரதான சூத்திரதாரியான ஸாரான் காசிமின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் ஒன்று கூடிவருகின்றனர் எனப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் ஒன்று கிடைத்துள்ளது

இதணையடுத்து அந்த வீட்டைநேற்று அதிகாலை 2 மணிக்கு பொலிஸாருடன் பலனாய்வுப் பிரிவினரும் இணைந்து சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன் போது அங்கு போட்டிக்கு (காட்ஸ் -304) கடதாசி விளையாடிக் கொண்டிருந்த (சீட்டாடிக் கொண்டிருந்த) - உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்த - ஸாரான் காசிமின் சாகோதரியின் கணவர் மற்றும் காத்தான்குடியில் 2017-3-10 திகதி இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்த 4 பேர் உட்பட 30 பேரை கைது செய்தனர். இதனையடுத்து விசாரணை மேற் கொண்டுவந்த பொலிஸார், விசேட பொலிஸாரை வரவழைத்து பல பிரிவுகளாக பிரிந்து, காலை 8 மணி தொடக்கம் கைது செய்யப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் வீடுகளை சோதனையிட்டு மேல்விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டவர்களிடம் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர், தேசிய புலனாய்வு பிரிவினர் பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட பலர் சென்று காசிமின் அடிப்படைவாத கொள்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஒன்று கூடினார்களா என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டமையுடன், அவர்களிடம் கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை பரிசோதனை செய்வதற்காக சைபர்கிரைம் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை சட்டவிரோதமாக ஒன்று கூடிய வீட்டிற்கு விசேட அதிரடிப்படையினர் மற்றும் தடயவியல் பிரிவு பொலிஸார் மேப்பநாய்களுடன் சென்று பெரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டமையுடன் அங்கிருந்து கைது செய்யப்பட்டவர்களின் 23 மோட்டர் சைக்கிள்களையும் ஓட்டோ ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து காத்தான்குடிப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் கடந்த சில காலங்களாக அங்கு இரவில் ஒன்று கூடி, சீட்டாட்டம் போட்டிக்கு விளையாடி வருகின்றனர் எனவும், அதில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் பரிசாக வழங்கி வருகின்றனர் எனவும் அவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட வர்களின் உறவினர்கள் ஒன்று கூடி காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.













# யாழ். பஸ் சேவை தரிப்பிடச் சர்ச்சை ஆராய ஐவர் அடங்கிய குழு நியமனம்

இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களை இணைந்த நேர அட்டவணைக்கு அமைய தூரப் பிரதேசங்களுக்கு போக்குவரத்துச் சேவையை யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திலிருந்து மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்கு, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன தலைமையில் ஐவரடங்கிய குழு நேற்று நியமிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து தூர பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கையின் பிரகாரம் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து உரிய தீர்வுகளை வழங்குவதற்கு குழு நியமிக்கப்படும் என ஆளுநர் அறிவித்தார்.

நேற்று நியமிக்கப்பட்டுள்ள ஐவரடங்கிய குழுவின் ஊடாக யாழ் புதிய பஸ் நிலையத்திலிருந்து, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களை இணைந்த நேர அட்டவணைக்கு அமைய தூர சேவைகளில் எவ்வாறு ஈடுபடுத்த முடியும் என்பது குறித்து ஆராயப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை ஒரு வாரத்திற்குள் ஆளுநருக்கு சமர்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.




# எரிவாயு விலைகளில் மாற்றம் இல்லை: லிட்ரோ,லாப்ஸ் நிறுவனங்கள் அறிவிப்பு

இம்மாதம் எரிவாயு விலையில் மாற்றம் மேற்கொள்ளப்போவதில்லை என லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

பெப்ரவரி மாதத்தில் அறிவிக்கப்பட்ட விலையை மார்ச் மாதத்திலும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் இம்மாதம் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்திலும் லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதனிடையே, லாப்ஸ் எரிவாயு விலையிலும் இம்மாதம் எவ்வித மாற்றங்களும் இல்லை என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு; நிதி அமைச்சு அனுமதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பு

சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று காலை 72 சுகாதார தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

அதற்கமைவாக, கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான யோசனை அறிக் கையானது, நிதி அமைச்சின் அனுமதிக்காகசமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகா தார தொழிற்சங்கங்களின் கூட்டமைப் பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்கள் அண்மையில் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தன.

இந்த பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சரினால் தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.03.2024

## மேஷம்

இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சில விதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும். இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம்.

## ரிஷபம்

உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

## மிதுனம்

உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

## கடகம்

இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## சிம்மம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

## கன்னி

இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.

## துலாம்

இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## விருச்சிகம்

இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.03.2024

### தனுசு

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

### கும்பம்

இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள் வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். மன வருத்தங்கள் ஏதும் இல்லாமல் திருப்தியான உணர்வுடன் இருப்பீர்கள்.

### மகரம்

இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

### மீனம்

உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.







## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக

# நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி மனு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அரச புலனாய்வு சேவைப் பிரிவின் முன்னாள் பிரதானியும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

சமூக கேந்திர நிலையம், அருட்தந்தை ரொஹான் டி சில்வா மற்றும் டி.டி. சுராச்சி நிலங்க ஆகியோரால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை தடுக்காமைக்கு பொறுப்புக்கூற வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலந்த ஜயவர்தன தொடர்பில் குற்ற விசாரணையை முன்னெடுத்து, அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடும்படி இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, உயர் நீதிமன்ற, மேல் நீதிமன்ற வழக்குகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபரும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் நிலந்த ஜயவர்தனவும் கடமை தவறியமையை அம்பலமாகியுள்ளதாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய சஹ்ரான் ஹாஷிம் உள்ளிட்ட குழுவினர் தொடர்பில் நீண்ட காலமாக அறிந்திருந்தும், அவர்கள் தாக்குதல் நடத்தப் போகிறார்கள் என 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிநாட்டிலிருந்து இருவரினால் இரகசியத் தகவல் வழங்கப்பட்ட போதிலும், அதனைக் கருத்திற்கொள்ளாமல் செயற்பட்டமையினால், ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் பல்வேறு இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகின என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தா க்குதலுக்கான பொறுப்பு நிலந்த ஜயவர்தனவுக்கு காணப்படுவதாகவும் விசாரணை நடத்தி, அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 2023 ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சை மே 6 முதல் 15 ஆம் திகதி வரை நடக்கும்

இந்த வருடத்திற்குள் நடத்தப்படவுள்ள பாடசாலை பரீட்சைகள், அவை நடத்தப்படும் திகதிகள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை மே மாதம் 06 ஆம் திகதி முதல் மே மாதம் 15 ஆம் திகதி வரை நடத்தப்படுமெனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையை செப்டம்பர் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது.

2024 கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் 25 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தர பரீட்சை இடம்பெறும் திகதி தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முன்பதிவு கட்டாயம்!

எதிர்வரும் திங்கள் கிழமையின் பின்னர் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருவோர் முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டியது கட்டாயமானதென மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக இரு முறைமைகள் பின்பற்றப்படுகின்றன என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் கட்டாய மாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




தமது திணைக்களத்தின் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியுமெனவும், தொலைபேசி அழைப்பின் ஊடாகவும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியுமெனவும் மோட்டார் வாகனப் போக்குவரத் துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.




# யாழ்., மானிப்பாய் வைத்தியசாலைகளின் வளர்ச்சி நிதிக்காக சைக்கிள் பயணம்!

## வெளிநாட்டவர்கள் கூட்டாகத் துவிச்சக்கர வண்டிச் சவாரி

(கே.வசந்தன்)

யாழ்ப்பாணம், மானிப்பாய் வைத்தியசாலைகளின் வளர்ச்சிக்காக வெளிநாட்டவர்களால் சைக்கிள் பயணம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்த 30 இற்கும் மேற்பட்டோர் சைக்கிள் பயணம் மூலம் நிதி சேகரித்து, அதனை யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில்



உள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கி அதனை சகல வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்கான சைக்கிள் பயணத்தைக் கண்டியில் கடந்த புதன்கிழமை ஆரம் பித்து அங்கிருந்து மாத்தளை ஊடாக தம்புள்ளை வந்து, அங்கிருந்து வவுனி யாவை நேற்று அடைந்தனர். அதன் பின் யாழ்ப்பாணம் நோக்கி பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுக ளில் இருந்து வந்த ஆண், பெண் எனப் பலரும் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர்.



# ‘பொன் அணிகள் போர்’ ஆட்டம் நேற்று ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)

‘பொன் அணிகளின் போர்’ என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கும் இடையிலான 107ஆவது துடுப்பாட்ட போட்டிகள் நேற்றைய தினம் ஆரம்ப மாகின.

இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இப் போட்டிகள் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நேற்று காலை 9 மணியளவில் ஆரம்ப மானது.

றொ.சியாந்சன் தலைமையிலான பத்திரிசியார் கல்லூரியும், எஸ்.நர்தனன் தலைமையிலான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் 107ஆவது பொன் அணிகளின் போர் துடுப்பாட்ட போட்டியில் களமிறங்கின.

நாணய சுழற்சியில் வென்ற புனித பத்திரிசியார் கல்லூரி முதலில் களத் தெடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்படுத்தாடிய யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கல்லூரி 80.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 189 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணி சார்பில் ஆர்.ஜோன் சன் 63 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார்.

புனித பத்திரிசியார் கல்லூரி சார்பில் பந்துவீச்சில் எஸ்.செகான், டி.அபிலாஷ் தலா 3 இலக்குகளை வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு தனது முதலாம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி முதல் நாள் ஆட்ட முடிவில் 17 ஓவர்களை எதிர்கொண்டு 3 இலக்கு களை இழந்து 53 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் யாழ்ப்பாண கல்லூரி வீரர் விஷ்னுகோபன் 3 இலக் குகளை வீழ்த்தினார். இன்றைய தினம் தொடர்ச்சியாக ஆட்டம் இடம் பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது.



# சப்புகஸ்கந்த நிலையம் தற்காலிகமாக மூடப்படும்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நாளாந்த செயற்பாடுகள் 45 நாள்கள் தற்காலிகமாக மூடப் படவுள்ளன என கனியவள கூட்டுத் தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் ஜீலை மாதம் முதல் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக மூடப் படவுள்ளன என அந்த கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

சர்வதேச முறைமைகளுக்கு அமைய, 45 நாள்களுக்கு சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கட்டாய தேவைகளுக்காக மூடப்பட வேண்டும்.

கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையம் அத்தியாவசிய திருத் தப்பணிகளுக்காக மூடப்பட்டிருந்தது.

எனினும் அந்த காலப்பகுதியில் நாட்டில் எரிப்பொருள் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான எரிப்பொருள் கையிருப்பை வைத்தி ருப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கனியவள கூட்டுத்தாபனம் தெரிவித்துள் ளது.

அத்துடன் இதற்கான சகல ஏற்பாடு களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தடையின்றி எரிபொருளை விநியோ கிப்பதற்கான சகல திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன என மேற்படி அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க சி.ஐ.டியினரால் கைது!



சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்க நேற்று சென்ற போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

இதன்போது சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க தொடர்பில் போதுமான சாட்சியங்கள் காணப்படுமாயின் அவரை கைது செய் வதற்கான அதிகாரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு காணப்படுவதாக மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபே விக்ரம தெரிவித்திருந்தார்





# இரு அணிகளும் இதயத்தால் இணையுமா?

## அல்லது இதழகன்று விலகுமா?



வி.எஸ்.சிவகரன்

தமிழரசுக் கட்சியின் நீதிமன்ற விவகாரம் மேலும் சில காலம் நீடிக்கும் – இழுபடும் – நிலை காணப்படுகிறது.

எந்த விடயமாக இருந்தாலும் சங்கதிகள் சந்திக்கு வந்து விட்டால் சதா நெருக்கடிதான். இவற்றை அறிவார்ந்து அணுகுதல் மூலமே நிலையான தீர்வை நோக்கி நகர முடியும்.

அது சாத்தியமா?

வழிப்போக்கர்களாலும் சந்தர்ப்பவாதிகளாலும் தான் அரசியல் சாக்கடை எப்போதும் சூழ்ந்து கிடக்கும் என்பது மரபற்ற விதி.

29 ஆம்திகதி வழக்கு விவகாரம்இரக்கத்தின் அடிப்படையில், வழக்காளிகள் மூலம் வழக்கை மீளப்பெற்றிருக்க வேண்டும். அதுதான் கட்சி நலனுக்கு உகந்ததாக அமைந்திருக்கும். 21 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெற்ற மாநாட்டு தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கோரியுள்ளனர் வழக்காளிகள். அதில் என்ன தவறு? எல்லோரும் ஒரே கட்சிக்காரரர் கள்தானே என்ற எண்ணம் தேர்தல் நிறைவடைந்த மறு நிமிடமே வந்திருக்க வேண்டும். எதிரியாகவோ துரோகியாகவோ நோக்குவதும் விமர்சிப்பதும் இணைந்து பயணிப்பதற்குச் சங்கடத்தை ஏற்படுத்தும்.

சிறீதரனுக்கு வாக்களித்தவர்கள் தேசியவாதிகள் அல்லது தியாகிகள் என்றும்–

சுமந்திரனுக்கு வாக்களித்தவர்கள் துரோகிகள் அல்லது கட்சிக்கு எதிரானவர்கள் என்றும் –

ஒருவிமர்சனவிம்பம்திட்டமிட்டுகட்டமைக்கப்படுகிறது.

அண்மையில் ஒரு துயர் பகிர்வு நிகழ்வில் சுமந்திரனுக்கு வாக்களித்த ஒரு முன்னாள் போராளி மிகவும் வேதனைப்பட்டார் – தாங்கள் இப்போது துரோகிப் பட்டியலில் இருப்பதாக. இந்த நிலைமை எல்லா மாவட்டங்களிலும் தொடர்கிறது.

அறிஞர் அண்ணா இறந்த பின்னர் தலைமைப் போட்டியில் சூழ்ச்சிகரமாக வெற்றி பெற்ற கருணாநிதியை மிகக் கடுமையாக எதிர்த்த பேராசிரியர் அன்பழகன் பின்னர் நான் ஏன் கருணாநிதியைத் தலைவராக ஏற்றேன் என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதை இவர்கள் முதலில் படிக்க வேண்டும்.

“தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும், அவற்றை விரைவில் திருத்திக் கொள்வதற்கான வலிமையும் தான் வெற்றி பெறுவதற்கான குணங்களாகும்” என்கிறார் லெனின். ஆகவே உள்வீட்டுப் பிரச்சினையை பேசித் தீர்ப்பதுதான் உகந்தது.

இரண்டு தரப்புகளின் ஏட்டிக்குப் போட்டி வாதங்களும், இரண்டக செயலும் ஒருபோதும் கட்சிக்கும் இனத்திற்கும் நன்மை பயக்கா என்பதை அவர்களும் புரியாமல் இல்லை. ஆனால் அவர்களின் வீறாப்பு, விடாப்பிடி, தன்நிலை வாத மேட்டிமைப் போக்கு போன்றவை இன உரிமைக்குள் சிந்திக்க விடாமல் சினம் கொண்டு அலைகிறது. அது பெரும் விளைவை ஏற்படுத்தும்.

எனவே கட்சியில் மீண்டும் புதிய தெரிவை கோருவது என்பது பெரிய விளைவை ஏற்படுத்தலாம். அதை அவர்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் பெரிய ஆச்சரியம்.

தொடர்ச்சி▼

# இரு அணிகளும் இதயத்தால் இணையுமா?

தொடர்ச்சி▲

இரண்டு துருவங்களாக கட்சி உள்ளபோது எப்படி மீள் தெரிவை கோருவது? தற்போது உள்ள மாவட்ட, தொகுதி கிளைகளிலிருந்தா அல்லது வட்டாரக் கிளைகளில் இருந்தா பொதுக்குழுத் தெரிவை இனி ஆரம்பிப்பது எனும் வாதம் எழலாம். சிறீதரன் தரப்பு வட்டாரக்கிளைகளில் இருந்து தெரிவு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தலாம். ஏனெனில் பல கிளைகள் தெரிவு செய்த முறை தவறு என விமர்சனங்கள் உண்டு. திருகோணமலை, கொழும்பு, காங்கேசன் துறைத் தொகுதி போன்றவை இதில் அடங்கும். யாழ்ப்பாணம் தொகுதி, மானிப்பாய் தொகுதிகள் பல வருடங்களாக தெரிவு செய்யப்படாமலேயே உள்ள மையும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல ஏலவே பொதுக்குழுவில் உறுப்புரிமை அற்றவர்கள், உறுப் புரிமைபுதுப்பிக்காதவர்கள்எல்லாம்வாக்களித்துள்ளனர். இந்த விவகாரம் உட்கட்சி தேர்தலில் மேலெழும்

ஆகவே சகல உறுப்புரிமை சீர் செய்யப்பட்டு இலகுவாக தேர்தல் நடாத்த முடியுமா?

தற்போது நீதி மன்றத்தை நாடியமை போல் இலகுவாக வட்டார அளவுச் சர்ச்சைக்கே நீதிமன்றம் போகக்கூடிய ஆபத்து எழலாம்.

இதைவிட இன்னொரு பேராபத்து உண்டு.

நீதிமன்றில் இந்த விவகாரங்களை முடித்து வெளியேறிய பின்னர் யாப்பின் படி கடந்த ஐந்து ஆண்டுகளாக உட்கட்சி தேர்தல் நடைபெறவில்லை என்று யாராவது தேர்தல் ஆணைக்குழுவுக்குப் போனால் கட்சியின் நிலை என்னவாகும்? வரும் தேர்தலில் போட்டியிட சின்னமும் இல்லாமல் போகலாம். பெயரளவில் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக இருப்பதில் அர்த்தமில்லை. இந்த ஆபத்துக்களை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஏனெனில் யாப்புக்கு எதிராக நீதிமன்றம் போன வர்கள் தேர்தல் ஆணைக்குழுக்கு போகமாட்டார்கள் என்று சொல்லமுடியாது.

வெறுமனே ஊடகச் செய்திகளுக்காக உணர்ச்சி வசப்பட்டு வழக்கை உடைத்தெறிவோம் என்று கூறுவது அர்த்தமும் பயனுமற்றது. கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சியில் நடந்த கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் மிகவும் கோபப்பட்டு எடுத்தெறிந்து வார்த்தைகளை அளவற்று அள்ளி வீசினர் எனக் கலந்து கொண்ட ஒரு மூத்த உறுப்பினர் கவலை தெரி வித்தார். இவை தலைமைக்குரிய உயர்ந்த பண்பல்ல. “அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியல்பு “ என்கிறார் வள்ளுவர். இக்கூற்றில் இவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஆகவே இவ்விதமான முரண்பாடுகள் எல்லாம் வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று உட்கட்சி தேர்தலிலுக்கு முன்னதாகவே எமது சிவில் அமைப்பின் ஊடாக ஒரு முயற்சி எடுத்தோம். கடந்த வாரம் பத்தி எழுத்தாளர் நிலாந்தன் அவர்கள் சிவில் சமூகத்தின் வகிபங்கின்மை பற்றி எழுமானமாக எழுதியிருந் தார். அது உண்மையில்லை. இவர்களது உட்கட்சி தேர்தலால் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டு தோல்விய டைந்தால் கட்சியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என சிறீதரன், சுமந்திரன் ஆகிய இருவரிடமும் மிகத்தெளிவாக தெரிவித்திருந்தோம். ஒரு கூட்டுக் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைத்தோம். அதில் சுமந்திரன் உரையாட வருவதற்குச் சம்மதம் தெரிவித்தார். சிறீதரன் சம்மதம் தெரிவிக்க வில்லை.

இந்த முயற்சியை யாழில் உள்ள ஒரு பேராசிரியர் ஊடாகவும் முன்னெடுத்தோம். பயன் தரவில்லை.

இவ்விதமான முயற்சியை முன்னெடுக்குமாறு மாவை சேனாதிராஜா உட்பட பலர் எம்மை கேட்டிருந் தனர். ஏனெனில் கடந்த பத்து ஆண்டுகளாக இவ்வித மான ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபட்டு வருவதனால் வேட்பாளர்கள் மட்டும் இன்றி, கட்சியின் வேறுபல முக்கியஸ்தர்களுடனும் உரையாடினோம். எதுவும் பயன் தரவில்லை. ஆகவே நாங்கள் இந்த விளைவை ஏலவே புரிந்து கொண்டுதான் இந்த முயற்சியை எடுத்தோம் என்பது நிலாந்தனும் அறியாமல் இல்லை.

தற்போது திருகோணமலை ஆயரால் எடுக்கப்பட்ட முயற்சிகள், இந்தியத் தூதரகம், நல்லை ஆதினம் எடுத்த முயற்சிகளும் காலம் கடந்தவையே. ஏறக்குறைய அ.தி.மு.கவின் ஓ.பி.எஸ். – ஈ.பி.எஸ். அணிகள் போல் உருவாகிவிட்டன. கட்சிக்குள் அணிகள் உருவாகினால் ஒருபோதும் உருப்பட வாய்ப்பில்லை.

இந்த உட்கட்சி விமர்சனங்கள் எதிர்காலத்திலும் அதிகரிக்கலாம். அவை வரும் தேர்தலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். தமிழரசுக்கட்சியின் குழு முரண்பாடுகள் தமிழ் மக்களுக்குப் பெரும் பின்னடைவையே தரும். ஏனெனில் தமிழ்மக்களுக்கு மாற்றுத் தெரிவுக்கு வேறு கட்சிகள் இல்லை. உள்ள கட்சிகளும் வட்டாரச் சிந்தனையில் உள்ள கட்சிகளே. அவர்களால் வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என்பது யாவரும் அறிந்ததே. தேர்தல் களத்தில் தொண்டர்கள் ஒருமித்த கருத்துடன் இணைந்து செயற்படக்கூடிய ஏது நிலை காணப்படுவதாகத் தெரிய வில்லை.

எனவே இந்த உள்கட்சிப் பூசலின் விளைவு அரச ஆதரவுக் கட்சிகளுக்கும் பிரதேசவாதம் பேசும் அணிக ளுக்கும் வாய்ப்பாக அமையலாம்.

இந்த முரண்பாட்டை கட்சிக்கு வெளியே இருந்து ஊக்குவிக்கும் சில ஊடகத் தரப்புக்கத், சில வெளிநாட்டு அமைப்புக்கள், தனி நபர்கள் ஆகியோர் இந்த சித்து விளையாட்டை நிறுத்திக்கொள்வது நல்லது. இதனால் பாதிக்கப்படுவது சுமந்திரன், சிறீதரன் அல்லர். தமிழினம் என்பதை பணமுதலீட்டாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் .

பச்சை மண்ணும், சுட்ட மண்ணும் ஒட்டிக் கொள்ளுமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனாலும் காலம் இடைவெளியை நிரப்பும். தேசம் தன் தலைமையைத் தீர்மானிக்கும்.



## பாலாறு தடுப்பணை விவகாரம்:

# ஆந்திர அரசை கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அடிக்கல் நாட்டிய ஆந்திர மாநில அரசை கண்டித்து அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகே நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆந்திர மாநிலம், குப்பம் தொகுதிக்கு உட்பட்ட ரெட்டிகுப்பம் பகுதியில் உள்ள பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநில அரசு தடுப்பணை கட்ட அம்மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி கடந்த சில நாள்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டினார். 215 கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட உள்ள இந்த தடுப்பணையில் 0.6 டி.எம்.சி. தண்ணீரைதேக்கி வைத்து குப்பம் தொகுதி மக்களின் குடிநீர் மற்றும் விவசாய தேவைக்கு பூர்த்தி செய்ய ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது.

ஆந்திர அரசின் புதிய தடுப்பணை திட்டத்துக்கு தமிழக விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நேற்று திருப்பத்தூரில் ஆந்திர அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகே பாலாறு பாதுகாப்பு கூட்டு இயக்கம் மற்றும் அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கச்செயலாளர் முல்லை, பாலாற்று நீர்வள ஆர்வலர் அசோகன், பாலாறு பாதுகாப்புக் கூட்டு இயக்கம் மற்றும் அனைத்து விவசாய சங்கங்களை சேர்ந்த முனுசாமி, சுப்பிரமணியன், ராதாகிருஷ்ணன், சேதுராமன், ஹரி கிருஷ்ணன், சஞ்சய் குமார், நடராஜன், ராஜா பெருமாள், வடிவேல் சுப்பிரமணியன், ராதாகிருஷ்ணன், அன்பழகன், கௌதம், சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கை கடற்படை விடுவிக்காத ரூபா 1 கோடி மதிப்பிலான 11 படகுகள்

## பிரதமருக்கு புதுச்சேரி முதல்வர் கடிதம்



இலங்கை கடற்படையால் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் கைப்பற்றப்பட்டுள்ள காரைக்காலைச் சேர்ந்த 11 மீனவப் படகுகளை மீட்க வேண்டும் எனக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு, புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

இந்தப் படகுகள் தலா 1 கோடி ரூபாவுக்கு மேல் விலையுள்ளவை என்பதால் மீனவர் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

புதுவை மாநிலத்தில் காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் விசைப்படகு மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் எதிர்பாராதவகையில் சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடிக்கும்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

மேலும், அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கையில் நிறுத்தப்பட்டுள்ளன. காரைக்கால் மீனவர்கள் கைது செய்யப்படும்போது மத்திய வெளியுறவுத் துறை தலையீட்டின் மூலம் அவர்களை இலங்கை அரசு விடுவித்துள்ளது. ஆனால், காரைக்கால் மீனவர்களது படகுகள் விடுவிக்கப்படவில்லை.

கடந்த 2019 வரை பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகுகளை இலங்கை அரசு விடுவித்தது. கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் காரைக்கால் மீனவர்களது 11 படகுகளை இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது. ஆகவே, அப்படகுகளை இலங்கை அரசு விடுவிக்கவில்லை. மோட்டார் பொருத்தப்பட்ட இப்படகுகளை விலை உயர்ந்தவை.

குறிப்பாக, ஒவ்வொரு படகும் தலா 1 கோடி ரூபாவுக்கு மேல் உள்ளவை. இதனால், மீனவர் வாழ்வு ஆதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றை மீட்டு, காரைக்கால் மீனவர்கள் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# கானாவில் மின் கட்டணத்தை செலுத்தாததால் நாடாளுமன்றத்தின் மின் விநியோகம் துண்டிப்பு

## மின் தூக்கியில் சிக்கிக்கொண்ட உறுப்பினர்கள்



மேற்கு ஆபிரிக்க நாடான கானாவின் நாடாளுமன்றத்திற்கான மின் விநியோகத்தை அந்த நாட்டு மின்சார நிறுவனம் துண்டித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கானா நாடாளுமன்றத்தில் அதிபர் நானா அகுஃபோர் அட்டோ நாட்டு மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக மின்சாரம் வழமைக்குத் திரும்பும் என நினைத்து உறுப்பினர்கள் அமர்ந்திருந்த நிலையில், மின்சாரத் தடை நீடித்தது.

இதையடுத்து, அங்கிருந்து உறுப்பினர்கள் அனைவரும் அக்கன் மொழியில் “மின்சார தடை” எனும் பொருள்பட “டம்சர், டம்சர்” என கோஷமிடத் தொடங்கினர்.

சில நிமிடங்கள் கடந்ததும், உறுப்பினர்கள் அமர்ந்திருந்த சபைக்கு மட்டும் ஜெனரேட்டர் உதவியுடன் மின்சாரம் கிடைத்தது.

ஆனால், நாடாளுமன்றத்தின் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வரவில்லை. இதனால், மின் தூக்கியில் பயணித்த பல உறுப்பினர்கள் அதில் சிக்கிக்கொள்ள நேர்ந்தது.

நாடாளுமன்ற அலுவலகம் செலுத்த வேண்டிய மின் கட்டண பாக்கியை வசூலிக்க பல முறை நோட்டீஸ் அனுப்பியும் கட்டணத்தை செலுத்தாததால், மின் விநியோகத்தை துண்டித்ததாக அந்த நாட்டு மின்சார நிறுவன செய்தித் தொடர்பாளர் வில்லியம் போடெங் தெரிவித்துள்ளார்.

மின் தடை என்பது கட்டணம் செலுத்தாத அனைவருக்கும் தான். கட்டணம் செலுத்தாதவர்கள் யாராக இருந்தாலும் மின்சார விநியோகம் துண்டிக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அந்த நாட்டின் அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வாங்க கானா அரசால் முடியவில்லை.

நாளின் பிற்பகுதியில் கட்டணத்தின் ஒரு பகுதியை செலுத்திய பிறகே நாடாளுமன்றத்திற்கு மின் விநியோகம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

கானா அரசு மின்சார துறைக்கு 1.8 மில்லியன் டொலர் அளவிற்கு கட்டண மிகுதி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வருடங்களின் பின்பு ஈரானில் நாடாளுமன்ற தேர்தல்





இரண்டு வருடங்களுக்கு பின்னர் ஈரானில் நேற்று நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஈரானில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதை தொடர்ந்து, தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றுள்ளது.

இந்த தேர்தலின் வாக்கெடுப்பானது காலை 8 மணிக்கு ஆரம்பமாகி வாக்கெடுப்பு பணிகள் மாலை 6 மணி வரை நடைபெற்றுள்ளது. இந்நிலையில் நடைபெற்ற தேர்தலில் சுமார் 15 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர்.

மேலும் தேர்தலுக்காக, ஈரான் முழுவதும் 59 ஆயிரம் வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டதோடு சுமார் 61.5 மில்லியன் மக்கள் தங்கள் வாக்குகளை பயன்படுத்தியுள்ளனர்.